எத்தனை இடங்களிலே என்ற விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரமுடியும். 2-10-78இல் துவக்கப்பட்டிருப்பது முதியோர் கல்வித்திட்டம், இப்போது அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள், பயிற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடியவிரைவில் தமிழகத்திலே முழுவதும் இது துவங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எல்லோரும் அவையை விட்டு வெளியேறினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சின்னையா அவர்கள் மட்டும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அந்த வெளிநடப்பிலே கலந்துகொள்ளவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

* வினா எண் 84—திரு. க. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

முறைசாராக் கல்வி திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் ஆரம்பிக்கும் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆரம்ப கல்வியினை பெறாதவர்களுக்காக முறைசாராக் கல்வி வகுப்புகள் தற்போது ஆரம்பப் பள்ளி கட்டிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு இடவசதி அமையாத இடங்களில் உயர்நிலைப்பள்ளி கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தவும் முறைசாராக் கல்வி இயக்குநர் அனுமதி அளித்துள்ளார்.

Development Schemes in Unions.

* Q. No. 85—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) The procedure adopted to sanction and execute development schemes like laying of roads, etc. by the Panchayat Unions run by Special Officers;

(*b*) Whether the Government have issued any directive that unless all the ex-members (i.e. Panchayat Presidents) of the union without exception, give their approval, the schemes shall not be executed; and

(*c*) if not, what is the specific directive issued regarding consultation with the ex-members and the powers in such consultations?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ஒன்றியங்களின் தலைவர்கள் மன்றங்கள் இவற்றின் அனைத்து அலுவல்களையும்—பொறுப்புக்களையும் தனி அலுவலர்களே நிறைவேற்றுகின்றனர்.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள சாலைகளில் பஸ் போக்கு வரத்து நடைபெறுகிறது. ஆனால் அந்த ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை சரி செய்வதற்கு ஒன்றியங்களிலே நிதிநிலையில்லை என்கிறார்கள். ஆகவே அரசாங்கமே அந்த சாலைகளையெல்லாம் எடுத்து கொள்வதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சாலை பழுதுபார்க்கின்ற நிலையை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தால் அவர்கள் கிராமசாலைகள் என்ற திட்டத்தின்கீழ் அதைச் செயல்படுத்துவார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலே உள்ள சாலைகள் செப்பனிடுவதற்கு போடுவதற்கு உச்சமட்ட தொகை, அதாவது சீலிங், ஒன்று விதிக்கப்படுகிறது. அந்தத் தொகை 1961ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டதால் இப்போது உள்ள கணக்குகள் படி சாலைகள் அமைக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை. எனவே அந்த கணக்கு வீதங்களை எல்லாம் பார்த்து உச்சமட்டத் தொகையை உயர்த்தி ஆணை பிறப்பிக்க முன்வருமா? அப்படிப்பட்ட செயல் முன்னேற்றங்களை யெல்லாம் பற்றி குறைந்த பட்சம் காலாண்டுக்கு ஒரு முறையாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆய்வு அறிக்கை என்ற முறையிலே கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவ்வளவு விரிவான இந்தக் கேள்வியைத் தனியாகப் போட்டால் தகவல் சொல்லப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நேரடி அதிகாரிகளின் கீழ் ரோடு வேலைகளுக்காக டெண்டர்கள் கோரப்படுகிறபோது, உடனடியாக செயல்படுவதில்லை, காலதாமதம் ஏற்படுகிறது, அந்தக் காலதாமதத்தைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது ஒரு புகார். குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.